**வனாத்தவில்லுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 24 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் வனாத்தவில்லுவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | எலுவன்குலம சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியின் பெறுமதி மற்றும் ரூபா 25,195,722 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிட பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் மதிப்பீட்டு பெறுமதி மற்றும் மூலதன செலவு இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் பரிந்துரையின் கீழ் எதிர்காலத்தில் மூலதன பெறுமதியை கணக்கீடு செய்வதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (ii) | வனாத்துவில்லுவ சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி மதிப்பிடப்பபட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | வனாத்துவில்லுவ சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (iii) | 2010 ஆண்டிற்கு முன்னர் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 2,798,117 ஆன 03 சொத்து மீதிகளை பௌதீக ரீதியாக இனங்காண முடியாதிருக்கையில் சொத்தாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | தகவல்களை நாளாதுவரையாக பேணப்பட வேண்டியதுடன் மூலதன சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2010 ஆண்டிற்கு முன்னர் சொத்துக்களை கொள்வனவு செய்யத தகவல்கள் தொடர்பான பதிவேடுகள் இல்லாததால் இம்மீதி எந்த சொத்துக்குரியது |

| | | |
|---|---|---|
| | | என குறிப்பாக இனங்காண முடியவில்லை. |

**(ஆ) பெறவேண்டிய கணக்ககள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபைக்கு பெறவேண்டிய 12 கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 12,269,467 ஆனதுடன் அதில் 03 ஆண்டுகளை விஞ்சிய பெறவேண்டிய மீதிகள் ரூபா 874,830 ஆனது. | பெற வேண்டிய வருமானத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமளவு ஏக்கர் வரி அறவிட முடியாத நிலையில் உள்ளன. பதிவழிக்க கோரிக்கை விடப்பட்டுள்ளது. மேலும் கடையறைகளின் குத்தகை உரிமையை மீண்டும் சுவீகரிக்க முன் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய 06 கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 13,164,862 ஆனதுடன் அதில் 03 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 3,467,635 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை இனங்கண்டு துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணம் 157 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் கூட்டுப் பெறுமதி ரூபா 227,963,288 ஆன 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் எடுத்து மூல சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்து.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | | | |
| (i) 5 (3) இலக்க விதி | வருமானம் சேகரிப்பது தொடர்பாக போதியளவு உள்ளக பரிசோதனை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (ii) 65 இலக்க விதி | கொடுப்பனவிற்காக இடமளிக்கப்பட்டுள்ள காலஎல்லை முடியில் கொடுப்பனவை புறக்கணிகும் நபர்களின் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (iii) 66 இலக்க விதி | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150(4) பிரகாரம் செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (iv) 205 இலக்க விதி | 2018 ஆண்டு பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் அழிக்கப்பட வேண்டிய மற்றும் ஏலவிற்பனை செய்யப்பட வேண்டிய பண்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (v) 218 இலக்க விதி | சபைக்கு சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை | குறித்த விதி பிரகாரம் நடவடிக்கை | ஏற்றுக்கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | ஒவ்வொறு ஆண்டிற்கு ஒரு முறை கணிப்பிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நிதிப்பிரமாணம் 1645 | சபையினால் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களினதும் தின ஓட்டக் குறிப்புகள் கணக்காய்வாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 2,662,719 ஆனதுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,622,281 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பிரதேச சபையினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீத வரி மற்றும் வரி | 3,583 | 1,789 | 1,565 | 1,184 | 895 | 1,036 | 990 | 960 |
| (ii) | வாடகை | 2,637 | 1,525 | 1,795 | 945 | 3,007 | 1,325 | 1,451 | 1,330 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 458 | 307 | 287 | 19 | 571 | 384 | 6,449 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 36,654 | 28,719 | 27,849 | 4,070 | 40,537 | 28,324 | 32,322 | 1,518 |
| | கூட்டுத் தொகை | 43,332 | 32,340 | 31,496 | 6,218 | 45,010 | 31,069 | 41,212 | 3,808 |

சேர்க்கப்பட்ட வருமானத்தினுள் ஆண்டில் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானமும் உள்ளடங்கியுள்ளன.

### 2.2.2 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் ரூபா 663,642 நிலுவை மீதியொன்று நிலவியதுடன் அந் நிலுவையிலிருந்து ரூபா 600,168 ஓராண்டை விஞ்சிய காலமாக அறவிட வேண்டியிருந்தது. | பதிவேடுகளை நாளாதுவரையாக பேண வேண்டியதுடன் சரியான நிலுவை மீதிகளை பரீட்சித்து அறவிட வேண்டிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமளவு ஏக்கர் வரி அறவிட முடியாத நிலையில் உள்ளது. இது தொடர்பாக மகா சபையை அறிவூட்டி நீண்ட காலமாக அறவிட முடியாத ஏக்கர் வரியை பதிவழிக்க தற்போது உள்ளூராட்சி ஆணையாளரிற்கு கோரிக்கை ஒன்று விடப்பட்டுள்ளது. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 670,463 வை அறவிட ஒழுங்கான முயற்சி எடுத்திருக்காததுடன் அக்கடையறைகளை மீண்டும் சுவீகரிக்கவும் முயற்சி எடுத்திருக்கவில்லை. | குறித்த உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டினுள் தவணைகளை செலுத்தாத கடையறைகளின் பில்லிடலை நிறுத்தி குத்தகை உரிமையை மீண்டும் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிற்கு பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,201,702 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,776,237 ஆனது. | அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த தொகையை பெற்றுக் கொள்ள தேவையான அட்டவைணைகள் தயாரிக்கப்பட்டு 2020 ஜுன் மாதம் மாகாண வருமான திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் 1988 ஆண்டில் 42 விடயங்களுக்கான உப விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் 05 உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. அவற்றில் சபையின் வருமானத்தை திரட்டிக் கொள்ளக்கூடிய உப விதிகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக:- வாகனங்கள் (முச்சக்கர வண்டி) தரிப்பிடங்கள். | விதித்துள்ள துணைச்சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். | நிறுவனத்திற்குரியதான அனைத்து உப விதிகளும் விதிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் நடைமுறை ரீதியாக செயற்படுத்தும் கடினங்கள் காணப்படுகின்றன. எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) சுவீகரக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 57 கடையறைகயின் காணி உரிமையை பிரதேச செயலாளரிடமிருந்து சட்ட ரீதியாக சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த சுவீகரிப்பை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த காணியை சட்ட ரீதியாக சபைக்கு சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கள் மேற்கொள்ளப்பட்டு பிரதேச செயலாளரினால் அளவைக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பணம் செலுத்தி அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயலுமையும் எமது நிறுவனத்திற்கு இல்லை. |

**(இ) மேற்கொள்ளப்படாத செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச எல்லையில் மனங்கவரும் களப்புக்கரை மற்றும் 02 ஓடைகளும் உள்ளதால் இயற்கை சுற்றாடலை பாதுகாப்பது தமது பணிக்கூற்றின் ஒரு பகுதியான போதும் களப்புக்கரையை பாதுகாத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அங்கு மீன் வள அபிவிருத்தியினூடாக பிரதேச மக்களின் வழ்கை நிலையை உயர்த்துவதற்காக சபையினால் தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்திக்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் அதிகாரியை அறிவூட்டி எதிர்காலத்தில் கரையோர பாதுகாப்பு வேலைத்திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டு முதல் கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளை முழுமையாக நிருத்தியிருந்ததால் ரூபா 4,238,619 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கொம்போஸ்ட் கொட்டில் நிறந்தரமாக விளைவற்று நிலவியது. | கொம்போஸ்ட் உற்பத்திக்காக முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்தி விறைவற்ற சொத்துக்களை நிறந்தரமாக பயன்படுத்த வேண்டும். | கழிவுப் பொருள் முகாமை மத்திய நிலையத்தில் கொம்போஸ்ட் தரையில் கொன்கிரீட் கட்டிகள் இருந்ததால் நியமத்திற்கு உற்பத்தியை மேற்கொள்ள முடியாததால் அதனை தயார் செய்து எதிர்காலத்தில் கொம்போறஸ்ட் உற்பத்தி செய்வதாக அறிவிக்கிறேன். |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | ஐக்கிய நாடுகள் சங்கத்தின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030" பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு மீளாய்வாண்டில் அதற்கு இணங்கியிருக்கவில்லை. | | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ள தேவையான நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும். | | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ள சபையில் காணப்படும் பௌதீக மற்றும் மனிதவளத்தின் பிரகாரம் முயற்ச்சித்துள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

### 3.2 முகாமைத்துவம் செயற்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | ---------------------------------------- | | -------------- | | --------------------------------------------- |
| | எழுவன்குலம நீர் பம்பிக்கு மின்சாரம் பெற்றுக் கொள்ள நிரப்பும் அடிப்படையில் சபையினால் செலவிடப்பட்ட ரூபா 58,775 ஆன தொகையை ஓராண்டை விஞ்சிய காலத்தை கடந்திருந்த போதும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | குறித்த தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | | இத் தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| | | | | | |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | ---------------------------------------- | | -------------- | | --------------------------------------------- |
| | அமைய மற்றும் ஒப்பந்த வகையில் 23 ஊழியர் மிகை ஆனதுடன் அவ் ஊழியர்களிற்கு சபை நிதியத்திலிருந்து சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | | ஆளணி வெற்றிடங்களை பூர்த்தி செய்துகொள்ள மற்றும் மிகை பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள முயற்சி எடுக்கக வேண்டும். | | முதன்நிலை ஊழியராக குறிப்பிடப்படும் முன்பள்ளி உதவியாளர் ஒருவரை 25/2014 இலக்க சுற்றறிக்கை பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார். உள்ளூராட்சி ஆணையாளர் ஆலவலகத்தினால் சம்பள மீள்நிரப்பு கிடைப்பதாக குறிப்பிடுவதுடன் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழயர்களுக்கு சபை வருமானத்தால (சியாம் நகர் கருத்திட்டம்) சம்பளம் செலுத்தப்பட்டது. |
| | | | | | |

### 3.4 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ----------------------------------------------- | -------------- | --------------------------------------------- |
| (அ) | ரூபா 9,001,205 ஆன 05 கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் செயற்படும் நிலையில் இருக்காததால் விளைவற்று நிலவியன. | விளைவற்ற சொத்துக்களிலிருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ள முறையான வேலை திட்டமொன்றை கடைபிடிக்க வேண்டும். | எதிர்காலத்தில் முறையாக்க நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |
| (ஆ) | சபையினால் நடாத்தப்படும் வாகன சேவை மத்திய நிலையத்திற்காக நூலக உதவியாளர் மற்றும் | மனித மற்றும் பௌதீக வளங்களை பயனுள்ளதாக | சேவை மத்திய நிலையத்திற்கு ஈடுபடுத்தியுள்ள நூலக |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டு அமைய தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சேவை மத்திய நிலையத்தில் உள்ள பௌதீக வளங்களை போன்று மனிதவளமும் பெறும்பாலான சந்தர்ப்பங்களில் குறைபயன்பாட்டுடன் நிலவின. சேவை மத்திய நிலையத்தில் பேணப்படும் பண்டக பதிவேடு ஒரு மாதத்திற்கு மேலாக சமப்படுத்தப்பட்டு இருக்காததுடன் 2020 பெப்ரவரி 10 திகதி மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையின் போது ரூபா 4,600 ஆன பண்டக பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. சபையின் வாகனங்களை சேவையிடும் செலவுகள் சேவை நிலையத்தின் வருமானமாக கணிப்பிட்ட பின்னரும் சேவை நிலைய வருடாந்த நட்டம் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் முறையே ரூபா 743,788 மற்றும் 924,934 ஆன உயர் பெறுமானத்தை கொண்டிருந்தது. | பயன்படுத்த வேண்டும். | உதவியாளர் எதிர் காலத்தில் 06 ஆம் கட்டையில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள நூலகத்திற்கு அனுப்புவதுடன் அங்கு அவரிடம் சேவை மத்திய நிலைய மற்றும் நூலக பதிவேடிடல் எனும் இரண்டு சேவைகளையும் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. |
| (இ) | ரூபா 3,633,827 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த எரிக்கன்வில்லுவ நீர் கருத்திட்டத்தில் ஒரு தினத்திற்கு 20,000 லீட்டர் நீர் உற்பத்தி செய்ய முடியுமான போதும் லீட்டர 1000 இற்கும் 3000 இற்கும் இடையிலான அளவே உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 08 மாதங்களில் நீர் விநியோக வருமானத்தை விஞ்சிய செலவு அதிகரிப்பதால் ரூபா 50,377 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | உச்ச கொள்ளலவில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு நீர் விநியோகத்திற்கான வேலைத் திட்டமொன்றை தயாரித்து இலாபம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் முறையாக்க நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் 27 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்திருந்த ரூபா 3,292,000 ஆன ஒதுக்கீடு முழுமையாக எஞ்சியிருந்ததுடன் மேலும் 24 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீட்டில் இருந்து | நடைமுறை சாத்தி பாதீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன், குறித்த விடயங்களை உரிய காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டினுள் எதரிபார்த்த மீண்டுவரும் மற்றும் மூலதன வருமானத்தை திரட்ட முடியாததால் சில செலவு விடயங்களில் கீழ் செலவிட முடியவில்லை. மேலும் சில செலவு தலைப்புகளில் செலவுகளை மேற்கொள்ள |

| | | |
|---|---|---|
| 60 சதவீதம் முதல் நூறு சதவீதம் வரையான மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 26,113,487 ஆனது. | | தேவை ஏற்படாததால் ஓதுக்கீடு எஞ்சியதாக காட்டப்படுகிறது.. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வொன்று செய்யப்பட்டிருந்த போதும் அதற்குரிய அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காயவை வலுவூட்ட வேண்டும். | சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக ஒவ்வொறு மாதமும் உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதுடன், 2019 திசெம்பர் மாதம் வரை உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். |